பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
20 08 2024 6 45
செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று மலேசியப் பிரதமர் திரு. அன்வர் இப்ராஹிமை சந்தித்து உரையாடுகிறார்.

2. இந்தியா - ஜப்பான் பாதுகாப்பு மற்றும் வெளியுறவு அமைச்சர்கள் இடையிலான பேச்சுவார்த்தைகள் புதுதில்லியில் இன்று நடைபெறுகின்றன.

3. ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தி தரும் விதத்தில் அமெரிக்க நிறுவனங்களுடன் தமிழக அரசு ஒப்பந்தம் செய்ய இருப்பதாக மாநில தொழில்துறை அமைச்சர் திரு. டி.ஆர்.பி. ராஜா தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் பிற மருத்துவமனைகளின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து உயர் அதிகாரிகளுடன் தலைமைச் செயலாளர் திரு. முருகானந்தம் ஆய்வு செய்தார்.

5. பாரீசில் நடைபெற இருக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவின் சார்பில் 84 வீரர் - வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி மூன்று நாள் பயணமாக போலந்து மற்றும் யுக்ரைன் நாடுகளுக்கு நாளை புறப்பட்டுச் செல்கிறார்.

45 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியப் பிரதமர் முதல் முறையாக போலந்து நாட்டுக்குச் செல்வதாக வெளியுறவுத் துறை செயலர் திரு. **Tanmay Lal** தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கிடையே 70 ஆண்டுகாலமாக அரசு ரீதியிலான உறவுகள் நிலவி வருவதாக அவர் தெரிவித்தார்.

போலந்து தலைநகர் வார்சாவில் பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு வரவேற்பு அளிக்கப்படுவதாகவும், அதன் பின்னர் போலந்து பிரதமர் திரு. டொனால்டு டஸ்க்-ஐ சந்தித்துப் பேச இருப்பதாகவும் அவர் கூறினார்.

அந்நாட்டு அதிபர் திரு. **Andrzej Duda**-வையும் பிரதமர் திரு. நரேந்திர மோடி சந்தித்து உரையாடுகிறார்.

மேலும் அங்குள்ள இந்திய வம்சாவளியினருடன் அவர் கலந்துரையாடுகிறார்.

வர்த்தக மற்றும் தொழில்துறை சார்ந்த பிரதிநிதிகளுடன் பிரதமர் சந்தித்துப் பேசுகிறார்.

அதன் பின்னர் வெள்ளிக்கிழமையன்று யுக்ரைன் செல்லும் பிரதமர், அந்நாட்டு அதிபர் திரு. வோலோடிமிர் ஜெலென்ஸ்கியை சந்தித்து உரையாடுகிறார்.

30 ஆண்டுகாலமாக இரு நாடுகளுக்கு இடையிலான உறவுகள் குறித்து இரு தலைவர்கள் விவாதிக்கின்னறர்.

ரஷ்யா – யுக்ரைன் இடையிலான போரை நிறுத்தி அமைதிப் பேச்சுவார்த்தை தொடங்குவதற்குத் தேவையான உதவிகளை இந்தியா வழங்கிட தயாராக இருப்பதாகவும் வெளியுறவுத்துறை செயலாளர் திரு. **Tanmay Lal** செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று மலேசியப் பிரதமர் திரு. அன்வர் இப்ராஹிமை சந்தித்து உரையாடுகிறார்.

அதன் பின்னர் அவரை கௌரவிக்கும் வகையில் விருந்தளிக்கிறார்.

மூன்று நாள் பயணமாக நேற்றிரவு இந்தியா வந்துள்ள மலேசியப் பிரதமர், குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவை, குடியரசுத்தலைவர் மாளிகையில் இன்று சந்தித்துப் பேசுகிறார்.

அதன் பின்னர் அவர் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், மலேசியப் பிரதமரை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து கலந்தாலோசிக்கிறார்.

இந்தியா – மலேசியாவுக்கு இடையிலான சமூக, கலாச்சார உறவுகள் நீடித்து வருவதாகவும், வரலாற்று ரீதியாக மிக உறுதியான இருதரப்பு உறவுகள் இருந்து வருவதாகவும் வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலேசியப் பிரதமர் திரு. அன்வர் இப்ராஹிமின் இந்தியப் பயணம் மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்றும், இதன்மூலம் இருநாடுகளுக்கு இடையே பல்வேறு துறைகளில் ஒத்துழைப்புகள் மேம்படுத்தப்படும் என்றும் வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>

பாரீசில் நடைபெற இருக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணியினருடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி நேற்று காணொலி காட்சி வாயிலாக கலந்துரையாடினார்.

வரும் 28ஆம் தேதி இந்தப் போட்டிகள் தொடங்குகின்றன.

இந்தப் பயணம் மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கையில் மிக முக்கியமானது என்று அவர் குறிப்பிட்டார்.

மேலும் நாட்டிற்கும் அதிமுக்கியத்துவம் வாய்ந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

140 கோடி இந்தியர்களும், மாற்றுத்திறனாளிகள் வெற்றிபெற ஆசிர்வதிப்பதாகவும் அவர் கூறினார்.

இதுபோன்ற மிகப்பெரிய விளையாட்டு நிகழ்ச்சியில் பங்கேற்பதற்கு தைரியமும், அர்ப்பணிப்பு உணர்வும், தியாகமும் மிக முக்கியமானவை என்றும் அவர் குறிப்பிட்டார்.

பல்வேறு தடைகளைத் தாண்டி சாதனை படைக்க வாழ்த்துவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

பாரீசில் நடைபெறும் மாற்றுத்திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டியில் 84 பேர் இந்தியாவின் சார்பில் பங்கேற்க உள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

இதில் 50 சதவீதம் பேர் முதல் முறையாக ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த முறை டோக்கியோவில் நடைபெற்ற பாரா ஒலிம்பிக் போட்டியில் 19 விருதுகளை இந்திய அணியினர் பெற்றதாகவும், 2022ஆம் ஆண்டு ஆசிய மாற்றுத்திறனாளிகள் விளையாட்டுப் போட்டியில் 111 விருதுகளைப் பெற்றுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த முறை இந்திய அணியினர் மேலும் பல பதக்கங்களைப் பெற்று இந்தியாவுக்கு பெருமை சேர்ப்பார்கள் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

<<<>>>

இந்தியா - ஜப்பான் பாதுகாப்பு மற்றும் வெளியுறவு அமைச்சர்கள் இடையிலான பேச்சுவார்த்தைகள் புதுதில்லியில் இன்று நடைபெறுகின்றன.

இதில் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், ஜப்பான் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. கிகாரா மினோரு, அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திருமதி யோகோ காமிகாவா ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இந்தப் பேச்சுவார்த்தைகளுக்கிடையே பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், ஜப்பான் பாதுகாப்பு அமைச்சருடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகள் நடத்த உள்ளார்.

இந்த இருதரப்பு பேச்சுவார்த்தையில் மண்டல மற்றும் உலகளாவிய பிரச்சினைகள் குறித்தும் விவாதிக்கப்படும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<>>>

இந்திய ராணுவத்தில் எடுக்கப்பட்டு வரும் பல்வேறு நடவடிக்கைகள் குறித்து உயர் அதிகாரிகளுடன் தலைமைத் தளபதி உபேந்திர திவிவேதி புதுதில்லியில் நேற்று ஆலோசனை நடத்தினார்.

வளர்ச்சியடைந்த இந்தியா-2047 என்ற இலக்கை நோக்கி இந்திய ராணுவம் செயல்படுத்த இருக்கும் திட்டங்கள் குறித்து அவர் விவாதித்தார்.

இந்திய ராணுவத்தின் திறன்களை மேம்படுத்துவதற்கும், ராணுவத்தினர் தயார்நிலையில் இருப்பது குறித்தும் ராணுவ தலைமையகங்களை மாற்றியமைப்பது குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டது.

இந்திய ராணுவத்தை நவீனப்படுத்துவதற்கான போர்க்கருவிகள், அதற்குத் தேவையான கட்டமைப்புகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

ராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து எதிர்கால சவால்களை சமாளிக்கும் விதத்திலான போர்ப்பயிற்சிகளில் ஈடுபடுவது குறித்தும் தலைமைத் தளபதி உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

சுயசார்பு இந்தியா திட்டத்தின்கீழ் பாதுகாப்பு துறையால் உற்பத்தி செய்யப்படும் ஆயுதங்கள் மற்றும் தளவாடங்களைப் பயன்படுத்துவது மற்றும் இவற்றை ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டதாக இந்திய ராணுவம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>

தமிழகத்தில் ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே நேற்று நீலகிரியில் பெய்த கனமழை காரணமாக அங்கு இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் உள்ள பழமைவாய்ந்த சங்கரநாராயண சுவாமி கோயிலின் குடமுழுக்கு விழா வரும் வெள்ளிக்கிழமை நடைபெறுவதை அடுத்து அங்கு உள்ளூர் விடுமுறை அளிக்கப்படுவதாக அம்மாவட்ட ஆட்சியர் திரு. கமல்கிஷோர் தெரிவித்துள்ளார்.

அனைத்து மாநில அரசு அலுவலகங்கள், நிறுவனங்களுக்கு உள்ளூர் விடுமுறை அளிக்கப்படுவதாகவும், அன்றைய தினம் அரசுத் தேர்வுகள் இருந்தால் சம்பந்தப்பட்ட தேர்வு எழுதும் மாணவர்கள் மற்றும் பணியாளர்கள், அலுவலர்கள் ஆகியோருக்கு இந்த விடுமுறை பொருந்தாது என்றும் கூறியுள்ளார்.

மாவட்ட கருவூலம் மற்றும் அனைத்து சார்நிலைக் கருவூலங்களும் குறைந்தபட்ச பணியாளர்களுடன் அவசர பணிகளை கவனிப்பதற்காக செயல்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடுமுறையை ஈடு செய்யும் விதத்தில் அடுத்த மாதம் 21ஆம் தேதி சனிக்கிழமையன்று அரசு அலுவலகங்கள் மாவட்டத்தில் செயல்படும் என்று மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>

தமிழகத்தில் ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தி தரும் விதத்தில் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அமெரிக்கப் பயணம் அமைய உள்ளதாக மாநில தொழில்துறை அமைச்சர் திரு. டி.ஆர்.பி. ராஜா தெரிவித்துள்ளார்.

திருவாரூரில் நேற்று மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தும் விதத்தில் பல்வேறு முதலீடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், முதலமைச்சரின் அமெரிக்கப் பயணத்தின்போது முக்கியமான நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திட இருப்பதாகவும் அவர் கூறினார்.

<<<>>>

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் சாரல் விழா கடந்த நான்கு நாட்களாக கொண்டாடப்பட்டது.

கலைநிகழ்ச்சிகளுடன் நேற்று இந்த விழா நிறைவுற்றது.

ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் குற்றால அருவியில் குளித்து மகிழ்ந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<>>>

தமிழகத்தில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் பிற மருத்துவமனைகளின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து உள்துறை மற்றும் சுகாதாரத்துறை மூத்த அதிகாரிகளுடன் தலைமைச் செயலாளர் திரு. முருகானந்தம் ஆய்வு நடத்தினார்.

இந்த ஆய்வின்போது காவல்துறை மற்றும் சுகாதாரத்துறை அலுவலர்கள் இணைந்து பாதுகாப்பு தணிக்கை நடத்த வேண்டும் என்று கூறினார்.

மருத்துவமனைகளில் நிறுவப்பட்டுள்ள அனைத்து கண்காணிப்பு கேமராக்களும் செயல்பாட்டில் இருக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

மருத்துவமனைகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு பாதுகாப்பு விதிமுறைகள் குறித்து பயிற்சியளிக்க வேண்டும் என்றும் கூறினார்.

இக்கூட்டத்தில் உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர், காவல்துறை தலைமை இயக்குநர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

<<<<>>>>

சென்னை ஏற்றுமதி நடைமுறை மண்டலமான மெப்சில் 800 பேருக்கு வேலைவாய்பப்பளிக்கும் 385 கோடி ரூபாய் முதலீட்டுத் திட்டங்களுக்கு மெப்ஸ் ஒப்புதல் அளித்துள்ளது.

இதற்கான தொழிலாக ஒப்புதல் குழுக் கூட்டம் மெப்ஸ் தலைவர் திரு. அலெக்ஸ்பால் மேனன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மொத்தம் 17 தொழிலகங்களில் ஆய்வு செய்யப்பட்டது.

இவற்றில் 10 தொழிலகங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

இந்த அனுகுமுறை மூலம் மேலும் கூடுதலான முதலீடுகள் ஈர்க்கப்படும் என்றும், இது பொருளாதார சூழலை வலுப்படுத்தும் என்றும் திரு. அலெக்ஸ் பால் மேனன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

*__இருவரிச் செய்திகள்__*

சீனாவில் **Ningxia Hui** பகுதியில் அமைந்துள்ள ரசாயன தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.

------------

கனடாவில் நடைபெற்ற இந்திய சுதந்திர தின கொண்டாட்டத்தில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட இந்தியர்கள் கலந்துகொண்டனர்.

------------

கொல்கத்தா பெண் பயிற்சி மருத்துவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து உச்சநீதிமன்றம் இன்று விசாரணை நடத்துகிறது.

------------

கிராமப்புற வங்கிகளின் மண்டல அளவிலான அதிகாரிகளுடன் மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் புதுதில்லியில் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

------------

அரசுப் பணிகளில் உயர் பதவிகளுக்கு நேரடி தேர்வு மூலம் அதிகாரிகளை நியமிப்பதை காங்கிரஸ் கட்சிதான் கொண்டுவந்ததாக மத்திய சட்டத்துறை அமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மெக்வால் தெரிவித்துள்ளார்.

------------

சென்னையில் இருந்து கோலாலம்பூருக்கு நட்சத்திர ஆமைகளைக் கடத்த முயன்ற 3 பேரை சுங்கத்துறையினர் சென்னை விமான நிலையத்தில் கைது செய்துள்ளனர். அவர்களிடம் இருந்து நட்சத்திர ஆமைகள் பறிமுதல் செய்யப்பட்டன.

------------

தேனி மாவட்டத்தில் 'உங்களைத் தேடி உங்கள் ஊர்' திட்டம் தேனி வட்டத்தில் நாளையும், நாளை மறுநாளும் நடைபெறும் என்று அம்மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஷஜீவனா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>